## பயிர்க்கடன் தள்ளுபடி – வறட்சி நிவாரணம் – இலவச மின்சாரம் இல்லாத வெற்று பட்ஜெட்!

# மாற்றம் என்று சொன்னவர்கள் விவசாயிகளுக்கு ஏமாற்றத்தையே கொடுத்துள்ளனர்!

### த.வெ.க. அரசின் வேளாண் பட்ஜெட் குறித்து வேளாண்துறை முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேட்டி!

**சென்னை, ஆக.7–**

**த.வெ.க. அரசின் வேளாண் பட்ஜெட் தொடர்பாக கழக முன்னாள் வேளாண்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் மாற்றம் என்று சொன்னவர்கள் விவசாயிகளுக்கு ஏமாற்றத்தையே கொடுத்துள்ளனர் என்றும், பயிர்க்கடன் தள்ளுபடி, வறட்சி நிவாரணம், இலவச மின்சாரம் என எந்தவொரு அறிவிப்பும் இல்லாத வெற்று பட்ஜெட் என்றும், புதிய திட்டங்கள் எதுவுமில்லை, ஏற்கனவே ஒதுக்கிய நிதியும் குறைப்பு என்றும் கூறினார்.**

இது குறித்து முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அளித்த பேட்டி வருமாறு:-

த.வெ.க. அரசின் இன்றைய வேளாண் பட்ஜெட்டை சட்டமன்றத்தில் உட்கார்ந்து கேட்டபோது, நாங்கள் எழுதிய புத்தகத்தைப் படிக்கிற மாதிரி ஒரு உணர்வு ஏற்பட்டது. மாற்றம் வேண்டும், மாற்றம் செய்வோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள் விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்துள்ளனர். மாற்றம் என்றால் என்ன? நாங்கள் ரூ.4,000 கொடுத்திருந்தால், நீங்கள் ரூ.10,000 கொடுக்க வேண்டும். நாங்கள் 50 சதவீத மானியம் கொடுத்திருந்தால், நீங்கள் 100 சதவீத மானியம் கொடுக்க வேண்டும். அதுதான் மாற்றம். ஆனால், இந்த பட்ஜெட்டில் அப்படிப்பட்ட புதிய அறிவிப்புகள் எதுவும் இல்லை. அதே திட்டங்கள், அதே அறிவிப்புகள், அதே நடைமுறைகள்தான் தொடர்கின்றன.

தேர்தலுக்கு முன்புதிருவாரூரில் பேசும்போது, “அடுத்த ஜென்மம் இருந்தால், நான் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறக்க வேண்டும்” என்று முதலமைச்சர் விஜய் அவர்கள் கூறினார். அப்படி வசனம் பேசி, மக்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை உருவாக்கினார்கள். அந்த எதிர்பார்ப்பின் அடிப்படையில்தான் மக்கள் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். இன்று அவர்கள் முதலமைச்சராக இருந்து முதல் வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆனால், அந்த பட்ஜெட்டை பார்த்தால், நாங்கள் கடந்த காலத்தில் அறிவித்து செயல்படுத்திய திட்டங்களே இதில் மீண்டும் இடம்பெற்றிருக்கின்றன.

**இடைக்கால பட்ஜெட்டில் அறிவித்த திட்டங்கள்!**

உதாரணமாக, ஆதிதிராவிடர் விவசாயக் குடும்பங்களுக்கு மானியத்தில் வேளாண் கருவிகள் வழங்கும் திட்டத்தை நாங்கள் அறிவித்து செயல்படுத்தினோம். ஆண் விவசாயி என்றாலும், பெண் விவசாயி என்றாலும், 70 சதவீத மானியத்தில் கருவிகள் வழங்கினோம். 2,125 கருவிகள் அந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன. இப்போது அதே திட்டத்திற்குப் பெயரை மட்டும் மாற்றியிருக்கிறார்கள். திட்டத்தின் உள்ளடக்கத்தில் எந்த மாற்றமும் இல்லை. இதுதான் இந்த பட்ஜெட்டின் நிலை. நாங்கள் தாக்கல் செய்த இடைக்கால பட்ஜெட்டில்இருந்ததிட்டங்களையே, வரி கூட மாறாமல் இந்த பட்ஜெட்டில் சேர்த்திருக்கிறார்கள். இதற்கு இதுவே ஒரு உதாரணம்.



அதேபோல, உணவுத் தானிய உற்பத்தி பற்றி இந்த அரசு 125 லட்சம் மெட்ரிக் டன் இலக்கு என்று அறிவித்திருக்கிறது. ஆனால், எங்களுடைய ஆட்சியில் 130 லட்சம் மெட்ரிக் டன் உணவுத் தானிய உற்பத்தியை எட்டியிருக்கிறோம். விவசாயி களுக்கு வழங்கப்படும் இலவச மின்சார மானியத்தை எடுத்துப் பார்த்தால், எங்களுடைய ஆட்சியில் ரூ.8,180 கோடி ஒதுக்கீடு செய்திருந்தோம். இப்போது இந்த அரசு ரூ.7,432 கோடி என்று அறிவித்திருக்கிறது. இதுவே ஒதுக்கீடு குறைந்திருக்கிறது என்பதற்குச் சான்று.

எங்களுடைய தலைவர், முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஐந்து ஆண்டுகளில் இரண்டு லட்சம் விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று அறிவித்து, அந்த இலக்கை நிறைவேற்றினார். ஆனால், அந்தத் திட்டம் இந்த வேளாண் பட்ஜெட்டில் எங்கும் இடம்பெறவில்லை. டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகளுக்காக ரூ.160 கோடி மதிப்பில் குறுவை தொகுப்பு வழங்கப்படும் என்று நாங்கள் அறிவித்திருந்தோம். ஆனால், இந்த அரசு ரூ.134 கோடி மட்டுமே ஒதுக்கியிருக்கிறது.

அதேபோல, மானாவாரி நில விவசாயிகள் கோடை உழவு செய்து சாகுபடியை அதிகரிக்க மானியத் திட்டம் எங்களுடைய ஆட்சியில் செயல்படுத்தப்பட்டது. அதற்காக ரூ.246 கோடி வரை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், இந்த பட்ஜெட்டில் அந்தத் திட்டம் குறித்து எந்த அறிவிப்பும் இல்லை.

இப்போது “மண் காப்போம், மண்வளம் காப்போம்” என்ற பெயரில் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஆனால், எங்களுடைய ஆட்சியில் அதற்காக ரூ.142 கோடி ஒதுக்கீடு செய்திருந்தோம். இப்போது ரூ.122 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது ரூ.20 கோடி குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளது.

**பயிர்க் காப்பீட்டு திட்டம்!**

பயிர்க் காப்பீட்டு திட்டத்தை எடுத்துப் பார்த்தாலும் அதே நிலைதான். மாநில அரசின் பங்களிப்பாக எங்களுடைய ஆட்சியில் ரூ.841 கோடி ஒதுக்கீடு செய்திருந்தோம். ஆனால், இப்போது அறிவிக்கப்பட்டிருப்பது அதைவிடக் குறைவாக உள்ளது. விவசாயிகளுக்கு பாதுகாப்பு தர வேண்டிய முக்கியமான திட்டத்தில்கூட ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது.

மக்காச்சோள சாகுபடிக்காக எங்களுடைய ஆட்சியில் ரூ.41 கோடி ஒதுக்கீடு செய்திருந்தோம். இப்போது ரூ.36 கோடி மட்டுமே அறிவித்திருக்கிறார்கள். இதிலும் ஒதுக்கீடு குறைந்திருக்கிறது.

கிராம வளர்ச்சித் திட்டம் பற்றியும் எந்த புதிய அறிவிப்பும் இல்லை. எங்களுடைய ஆட்சியில் தமிழ்நாட்டில் உள்ள 12,525 ஊராட்சிகளிலும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அந்தத் திட்டங்களுக்காக நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவிடப்பட்டது. ஆனால், இந்த பட்ஜெட்டில் அதைப்பற்றிய எந்தத் திட்டமும் இடம்பெறவில்லை.

விதை கொள்முதல் திட்டத்திலும் அதே நிலைதான். எங்களுடைய ஆட்சியில் 12 ஆயிரம் மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயித்திருந்தோம். ஆனால், இந்த அரசு 7,700 மெட்ரிக் டன் என்ற அளவையே நிர்ணயித்திருக்கிறது.

ஆக, “மாற்றம், மாற்றம்” என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள், இந்த வேளாண் பட்ஜெட்டில் மாற்றத்தை அல்ல; விவசாயிகளுக்கு ஏமாற்றத்தையே கொடுத்திருக்கிறார்கள். எந்த புதிய திட்டமும் இந்த பட்ஜெட்டில் இடம்பெறவில்லை.

வேளாண் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் அதே நிலைதான். எங்களுடைய ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் சுமார் 77 ஆயிரம் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. ஆனால், இந்த பட்ஜெட்டில் அதற்கான ஒதுக்கீடும் குறைவாகவே உள்ளது.

அதேபோல, நம்மாழ்வார் அவர்களின் பெயரில் அதிக மகசூல் பெறும் விவசாயி களுக்கு விருது வழங்கும் திட்டத்தை எங்களுடைய ஆட்சியில் செயல்படுத்தினோம். சிறந்த விளைச்சலைப் பெற்ற விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில்தான் அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், இப்போது அதே திட்டத்தை வேறு பெயரில் அறிவித்திருக்கிறார்கள். பெயர் மட்டும் மாறியிருக்கிறது; திட்டத்தின் நோக்கமும், செயல்பாடும் அதேதான். நான் ஏற்கனவே சொன்னது போல, இது “ஸ்டிக்கர்” ஒட்டிய மாற்றம் தான்; உண்மையான மாற்றம் அல்ல.

**கரும்பு விவசாயிகளுக்கு ரூ.4500 எங்கே?**

நெல்லுக்கு திமுக ஆட்சியில் சன்ன ரகத்திற்கு ரூ.2,545 வரை வழங்கினோம். ஆனால், “நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரூ.3,500 கொடுப்போம்” என்று தேர்தலுக்கு முன்பு சொன்னார்கள். இப்போது அந்த அறிவிப்பு எங்கே? பட்ஜெட்டில் அதைப்பற்றி எதுவும் இல்லை. அதேபோல கரும்பு விவசாயிகளுக்கும் ரூ.4,500 வழங்குவோம் என்று கூறினார்கள். அதுவும் இந்த பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்த விவசாயிகளுக்கு மீண்டும் ஏமாற்றம்தான் கிடைத்திருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தஞ்சாவூர் உள்ளிட்ட பல மாவட்டங்களில் பாதுகாப்பான நெல் கிடங்குகளை எங்களுடைய ஆட்சியில் கட்டினோம். நெல் பாதுகாப்பாக சேமிக்கப்பட வேண்டும் என்பதற்காக அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த பட்ஜெட்டில் புதிய கிடங்குகள் அமைப்பது பற்றியோ, நெல் கொள்முதல் மையங்களை வலுப்படுத்துவது பற்றியோ எந்த அறிவிப்பும் இல்லை. அதேபோல டெல்டா விவசாயிகளுக்காக ஏதாவது சிறப்பு நிவாரணம், குறுவை சாகுபடிக்கான உதவித் தொகை அல்லது வறட்சி நிவாரணம் அறிவிப்பார்கள் என்று விவசாயிகள் எதிர்பார்த்தார்கள். ஆனால், அது பற்றியும் எந்த அறிவிப்பும் இல்லை.

இன்று டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் சாகுபடியே தொடங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு ஆதரவாக தஞ்சாவூரில் போராட்டமும் நடத்தினோம். பாதிக்கப்பட்ட டெல்டா விவசாயிகளின் கூட்டுறவு வங்கிக் கடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தோம்.

கலைஞர் அவர்கள் தொடங்கிய வட்டியில்லா கூட்டுறவுக் கடன் திட்டத்தை, எங்களுடைய ஆட்சியில் மேலும் விரிவுபடுத்தினோம். ஒன்பது மாதங்களுக்குள் கடனைத் திருப்பிச் செலுத்தினால் வட்டி கிடையாது என்ற சலுகை வழங்கப்பட்டது. ஆனால், தற்போது குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டதால், பல விவசாயிகளால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. காலக்கெடு தாண்டிவிட்டால் முழு வட்டியும் விதிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இது விவசாயிகளுக்கு மேலும் சுமையாக மாறிவிடும்.

இப்போது பல இடங்களில் போர் பாசனத்தையே நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், அதற்குத் தேவையான மும்முனை மின்சாரம் கூட முறையாக கிடைப்பதில்லை. எங்களுடைய ஆட்சியில் விவசாயத்துக்கு 24 மணி நேரமும் தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**மின்சாரமின்றி விவசாயிகள் தவிப்பு!**

இப்போது நிலைமை என்ன? எப்போது மின்சாரம் வரும், எப்போது போகும் என்று விவசாயிகளுக்கே தெரியாத சூழல். மோட்டார் இயக்க முடியாமல் விவசாயிகள் தவிக்கிறார்கள். குறிப்பாக காவேரி டெல்டா பகுதிகளில் இந்தப் பிரச்சினை மிகவும் கடுமையாக இருக்கிறது.

காவிரி என்பது அரசியல் பிரச்சினை அல்ல; தமிழ்நாட்டு விவசாயிகளின் உயிர் பிரச்சினை. கர்நாடகாவில் பாருங்கள். தண்ணீர் பிரச்சினை என்றால், அங்குள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றாக நிற்கிறார்கள். ஆளும் கட்சியா, எதிர்க்கட்சியா என்று பார்க்க மாட்டார்கள். மாநிலத்தின் உரிமைக்காக ஒன்றிணைந்து குரல் கொடுக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் அந்த ஒற்றுமை இருக்கிறதா? அனைத்து கட்சிகளையும் அழைத்து ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டாமா? அனைவரின் கருத்தையும் கேட்டு, ஒருமித்த முடிவை எடுக்க வேண்டாமா? ஆனால் அதை கூட செய்ய மறுக்கிறது இந்த அரசு. “மாற்றம்” என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள், இந்த வேளாண் பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு “ஏமாற்றம்” கொடுத்திருக்கிறார்கள்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேட்டியளித்துள்ளார்.

---

# சென்னை மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகள் 54.62% நிறைவு!

### மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!

*புதுடெல்லி, ஆக. 7*

தென் சென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்தின் 3, 4 மற்றும் 5-வது வழித்தடங்களின் பணிகள், அதற்காக விடுவிக்கப்பட்ட மத்திய நிதி மற்றும் இந்தத் திட்டம் சென்னை நகரின் போக்குவரத்தில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதில், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்தின் 3, 4 மற்றும் 5-வது வழித்தடங்களில் நிலுவையில் உள்ள பணிகளை மத்திய அரசு விரைவுபடுத்தி யுள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் அதற்காகவிடுவிக்கப்பட்ட நிதி எவ்வளவு? மேலும், சென்னை மெட்ரோ ரயில் வலையமைப்பு விரிவாக்கம் நகர்ப்புற போக்குவரத்து, போக்குவரத்து நெரிசல் குறைப்பு மற்றும் கடைசி மைல் இணைப்பை எந்த அளவிற்கு மேம்படுத்தும்?



என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் இணையமைச்சர் தோகன் சாஹு எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் :

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டம் மொத்தம் 118.9 கிலோமீட்டர் நீளத்தில், 3 வழித்தடங்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், 3-வது வழித்தடம் மாதவரம்-சிப்காட் (45.8 கி.மீ.), 4-வது வழித்தடம் கலங்கரை விளக்கம்-பூந்தமல்லி பைபாஸ் (26.1 கி.மீ.), 5-வது வழித்தடம் மாதவரம்-சோழிங்கநல்லூர் (47.0 கி.மீ.) ஆகியவை அடங்கும். இந்தத் திட்டத்திற்கு ரூ.63,246 கோடி செலவில் மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வழங்கிய தகவலின்படி, இரண்டாம் கட்டத் திட்டத்தின் ஒட்டுமொத்த இயற்பியல் முன்னேற்றம் தற்போது 54.62 சதவீதமாக உள்ளது. திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் சிறப்பு நோக்க நிறுவனமான சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிதித் தேவையின் அடிப்படையில் மத்திய அரசு நிதி விடுவித்து வருகிறது. திட்டத்திற்கு 2024 அக்டோபரில் ஒப்புதல் அளிக்கப்பட்டதிலிருந்து இதுவரை ரூ.14,545.91 கோடி மத்திய நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திட்டப் பணிகளை விரைவாக நிறைவு செய்வதற்காக, உயர்மட்டக் குழு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு மற்றும் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு நிலைகளில் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

சென்னை மெட்ரோ இரண்டாம் கட்ட விரிவாக்கம் மூலம், சென்னை பெருநகரப் பகுதியில் பாதுகாப்பான, தடையற்ற மற்றும் திறன்மிக்க பொது போக்குவரத்து வசதி ஏற்படும். மேலும், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், விமான நிலையம் மற்றும் பிற மெட்ரோ வழித்தடங்களுடன் ஒருங்கிணைந்த இணைப்பு உருவாக்கப்படுவதால் போக்குவரத்து நெரிசல் குறையும். கடைசி மைல் இணைப்பை மேம்படுத்த தனித்துவமான ஃபீடர் சேவைகளும் ஏற்படுத்தப்படுவதால், பொதுமக்கள் தொடக்கம் முதல் இறுதி இலக்கு வரை மெட்ரோ சேவையை எளிதாக பயன்படுத்த முடியும் என்றும் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகளுக்கான

# தகுதித் தேர்வு முறையை மாற்ற வேண்டும்!

### ஒன்றிய அமைச்சருக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

*புதுடெல்லி, ஆக. 7*

வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி ஒன்றிய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜெகந் பிரகாஷ் நட்டா அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகளுக்கான தகுதி (FMG) தேர்வில் மிகக் குறைந்த அளவு , அதாவது 12.78 சதவிகித மருத்துவர்களே தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்வு முறையும், வினாத்தாட்கள் அமைப்பும் மட்டுமே இந்த குறைந்த அளவு தேர்ச்சிக்கு காரணம் என இத்தேர்வு



எழுதிய மருத்துவப் பட்டதாரிகள் குற்றம் சாட்டுகின்றனர். எனவே தேர்வு முறையை மாற்ற வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

அவர் தனது கடிதத்தில், ஜூன் 2026 FMGE தேர்வில் 36,280 பேர் தேர்வு எழுதிய நிலையில், வெறும் 4,635 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றுள்ளனர். இதனால் தேர்ச்சி விகிதம் 12.78 சதவீதமாக சரிந்துள்ளது. கடந்த ஆண்டுகளை ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க வீழ்ச்சியாக இருப்பதால், தேர்வு முறை மற்றும் மதிப்பீட்டு நடைமுறைகள் குறித்து மாணவர்களிடையே கடும் அதிருப்தியும் சந்தேகமும் நிலவுவதாக தெரிவித்துள்ளார்.


மேலும், இரண்டாவது வினாத்தாள் வழக்கத்தை விட மிகவும் கடினமாக இருந்ததாகவும், அதிகளவில் Clinical Scenario, Image-based மற்றும் Video-based வினாக்கள் இடம்பெற்றதால், ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் அனைத்து வினாக்களுக்கும் பதிலளிக்க முடியவில்லை என மாணவர்கள் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், 327 மாணவர்கள் வெறும் ஒரு மதிப்பெண் வித்தியாசத்தில் தேர்ச்சி வாய்ப்பை இழந்துள்ளதுடன், சுமார் 10,000 மாணவர்கள் 130 முதல் 149 மதிப்பெண்களுக்கு இடையில் பெற்றுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, ஜூன் 2026 FMGE தேர்வின் வினாத்தாள் அமைப்பு, கடினத்தன்மை, மதிப்பீட்டு முறை ஆகியவற்றை சுயாதீனமாகவும் வெளிப்படையாகவும் ஆய்வு செய்ய வேண்டும் என்றும், தேர்வின் தரநிலைகள் மற்றும் பாடத்திட்டத்துடன் அதன் ஒத்திசைவு பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். மேலும், மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, ஒருமுறை மட்டும் தேர்ச்சி மதிப்பெண்ணில் தளர்வு வழங்குவது உள்ளிட்ட நியாயமான நிவாரண நடவடிக்கைகளையும் பரிசீலிக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இந்த விவகாரத்தில் மத்திய அரசு உடனடி தலையீடு செய்து, பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன், வெளிப்படைத் தன்மை மற்றும் நீதி நிலைநாட்டும் வகையில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தியுள்ளார்.

---

### ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!



முட்டாள் ஒருவனுக்கு அதிகாரம் கிடைத்தால்
அவன் செய்யும் முதல் செயல்
அறிவாளிகளை மௌனப்படுத்துவது.
அடுத்த செயல் மற்ற முட்டாள்களை
தன்னுடன் சேர்ப்பது,
கடைசி செயல் நாட்டை நாசம் செய்வது.

-பிளேட்டோ